10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 | அதிர்வு 04 | வெள்ளிக்கிழமை 04 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18

## ஊடகவியலாளர்கள் கொலை ஆணைக்குழுக்கள் மூலம் விசாரணை

சிவாஜிலிங்கம் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே 04

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்து விசேட ஆணைக்குழுக்களை அமைத்து அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதனூடாகவே ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்க முடியுமென வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்

06▶

ஊடகப்போராளிகளின் நினைவுத்தூபி

## வரலாற்று பொக்கிஷமாக பாதுகாக்கப்படும்

யாழ்ப்பாணம், மே 04

தமிழ்த் தேசத்தின் குரலாக ஒலிக்கும் ஊடகப் போராளிகளின் நினைவாக யாழில் அமைந்துள்ள நினைவுத் தூபி வரலாற்றுப் பொக்கிஷமாக பாதுகாக்கப்படுமென யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக யாழ்.பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வு சர்வதேச

06▶

## கிழங்கு, வெங்காய விலையும் எகிறும்

கொழும்பு, மே04

இறக்குமதி செய்யப்படுகின்ற பெரிய வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கிற்கான விஷேட பண்ட வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு கூறியுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்குக்கான வரி 40 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. (த)

# 13 தீர்வைத் தராது



## சம்பந்தன்

கொழும்பு, மே 04

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு 13 ஆவது அரசியலமைப்பு சீர் திருத்தம் தீர்வாகாது என்பதை மங்கள முனசிங்க தெரிவுக்குழு உறுதிப்படுத்தியதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரேமதாசாவின் 25 ஆவது சிரார்த்த தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒரு போதும் நிரந்தர தீர்வாக

06▶



## சர்வதேச ஊடகதினம் யாழில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே04

யாழ்.ஊடக அமையத்தின் ஒழுங்கமைப்பில் சர்வதேச ஊடக சுதந்திர தினம் நேற்றையதினம் யாழ்.பிரதான வீதியில் உள்ள ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் நினைவுகூரப்பட்டது.

மாலை 3 மணிக்கு நடைபெற்ற இந்த நினைவுகூரல்

06▶

## சிறை வாகனத்தில் சென்று மது அருந்திய அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மே 04

சிறைச்சாலை ஜெயிலர் உள்பட 3 உத்தியோகத்தர்கள் சிறைச்சாலை வாகனத்தில் மது அருந்தச் சென்றமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை ஜெயிலர் உட்பட 3 சிறைச்சாலை உத்தியோகத்தர் மற்றும் பொது மகன் ஒருவருக்கும் இடையே ரெஸ்ரோரன்டில் சினிமா பாணியில் கைகலப்பு நடைபெற்றதாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள ரெஸ்ரோரன்டிலேயே இந்த கைகலப்பு கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை வாகனம்மீது தாக்குதல்நடத்தப்பட்டதாக சிறைச்சாலை ஜெயிலர் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு

06▶

## காலைவாரியது கூட்டமைப்பு

மன்னார், மே 04

வன்னி மாவட்டத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 14 சபைகளில், 13 சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் இணைந்து ஆட்சியை உருவாக்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அது தொடர்பான இணக்கப்பாடு தனக்கும், சுமந்திரன் எம்.பி.க்கும் ஏற்பட்ட போதும், இறுதி நேரத்தில் தமிழ்த் தேசியக்

06▶



## பிரபாவுக்கு நிகர் பிரபாவே!

யாழ்ப்பாணம், மே 04

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு நிகரான ஒருவராக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தன்னை ஒரு போதும் கருதியதில்லையென தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தின நிகழ்வு யாழ் நல்லூர் கிட்டு பூங்காவில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் உரையாற்றிய அகில இலங்கைத் தமிழ்

06▶

## படைக்கு காணி; தடுத்தனர் மக்கள்



மாங்குளம், மே04

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் கண்டி - யாழ்ப்பாண வீதியில் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள மக்களது காணிகளை அதிகாரிகள் நிலஅளவை செய்வதற்காக சென்றவேளை, மக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் அதனைத் தடுத்துநிறுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் கண்டி-யாழ்ப்பாண வீதி ஓரமாக இராணுவத்தின்

06▶

## காரைநகரிலும் காணி பிடிப்பு

யாழ்ப்பாணம், மே 04

யாழ்ப்பாணம் காரைநகர் இந்துக் கல்லூரி வளாகத்தில் கடற்படையினரால் பாரிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கபட்டுள்ளது.

இதற்கு பாடசாலை நிர்வாகம் எதிர்ப்பு தெரிவித்துள்ள போதும் கடற்படையினரின் நடவடிக்கை தொடர்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சிறந்த பாடசாலைத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு குறித்த பாடசாலையின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பதற்காக பாடசாலை

06▶

# விபுலானந்தரின் ஜனன தினம்



மட்டக்களப்பு, மே 04

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 126 ஆவது ஜனன தின நிகழ்வுகள் நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வுகள் கல்லடி - உப்போடையில் உள்ள விபுலானந்தரின் சமாதியில், உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரி அதிபர் திலகவதி ஹரிதாஸ் தலைமையில் நடைபெற்றுள்ளது. இதன்போது, சுவாமி விபுலானந்தரின் சமாதிக்கு மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிசன் சுவாமி பிரபுபிரபானந்தஜி மகராஜினால் பூஜைகள் செய்யப்பட்டன.

தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மலர் அஞ்சலியும் செலுத்தினர். (ஆ)



## ஊழலில் ஈடுபட்டால் அமைச்சர் ஆகலாமா?

### பிரதியமைச்சர் ரஞ்சன் கேள்வி

கொழும்பு, மே 04

ஊழலில் ஈடுபடுவதுதான் அமைச்சராவதற்கான முக்கியத் தகுதியா? என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் மாற்றம் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

“நான் ஒருபோதும் ஊழலில் ஈடுபட்டதில்லை . ஆனால், எனக்கு பிரதியமைச்சர் பதவியே கிடைத்துள்ளது. இதன் காரணமாக அமைச்சர் பதவியை பெறுவதற்கு நான் ஊழலில் ஈடுபடவேண்டுமா என்ற கேள்வி எனக்குள் எழுந்துள்ளது . நான் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். ஊழலில் ஈடுபட்டவர்களை அம்பலப்படுத்தி உள்ளேன். தொடர்ந்தும் அவ்வாறுதான் செயற்படுவேன்.” எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## அதிகரித்துச் செல்லும் முதியோர் எண்ணிக்கை

கொழும்பு, மே 04

இலங்கை மக்கள் தொகையில் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால், வயது முதிர்ந்தவர்கள் எதிர்க்கொள்ளும் நோய்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலையின் வாத நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டின் சனத்தொகையில் 10 சத வீதத்துக்கும் அதிகமானோர் வயது முதிர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தொகை 2030 ஆம் ஆண்டில், 22 சதவீதமாக அதிகரிக்கும். ஆகவே 2030 ஆண்டில் 5 இலட்சத்துக்கும் அதிகமான வயது முதிர்ந்தவர்கள், வாத நோய்களால் பாதிக்கப்படுவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஆ)

## சிறையில் இருப்பவர்களில் இராணுவத்தினரே அதிகம்

### சொல்கிறார் கோத்தா



கொழும்பு, மே 04

சிறையில் இருப்பவர்களில் அதிகமானவர்கள் இராணுவ வீரர்களே என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இராணுவத்தினர் நாட்டுக்காகச் செய்த அர்ப்பணிப்புக்களைக் கண்டுகொள்ளாமல் அவர்களைத் துன்பத்தில் தள்ளிவிட்டுள்ளனர். சிறையில் இருக்கும் இராணுவ வீரர்கள் வெளியில் வர வேண்டுமானால் இருக்கும் ஒரே வழி கோத்தாபய ராஜபக்ஷவைக் காட்டிக் கொடுப்பதே ஆகும்.

இராணுவத்தினர் ஒருபோதும் பொய் கூறி வாழக்கையைப் பாதுகாத்துக் கொள்பவர்கள் அல்லர். " என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## நிறைவேற்று ஜனாதிபதி நாட்டுக்கு அவசியம்

### ஆனந்ததேரர் வலியுறுத்து

கொழும்பு, மே 04

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நாட்டுக்கு அவசியம் என்று அஸ்கிரிய பீடத்தின் உதவிப் பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாரம்பனாவே ஆனந்த தேரரை நேற்றுமுன்தினம் சந்தித்தனர். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

" 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு நான் எதிர்ப்புத் தெரிவித்தேன். எனினும், அந்தச் சந்தர்ப்பத்தில் அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய அவசியம் அப்போதைய ஜனாதிபதிக்கு இருந்தது. எனினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை பாதுகாப்பதற்குத் தேவையான உறுப்புரை 13 ஆவது திருத்தத்தில் சேர்க்கப்பட வேண்டும்." என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

## இராணுவப் புலனாய்வின் புதிய தளபதியாக ராஜகுரு



கொழும்பு, மே 04

இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ருக்மல் டயஸ், கடந்த மாதம் 27ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

இதை அடுத்தே புதிய தளபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர், கரந்தெனியவில் உள்ள இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவு தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஆ)

## எரிபொருள் நிலையத்தில் கொள்ளை

மாகந்துர, மே 04

மாகந்துர - கோனவில பிரதேசத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்று அதிகாலை கொள்ளை இடப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்களில் முகத்தை முழுவதுமாக மறைக்கும் தலைக்கவசம் அணிந்து வந்த 2 நபர்கள், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றிய நபர்களிடம் ஆயுதங்களை காட்டி மிரட்டியுள்ளனர். தொடர்ந்து, அவர்களிடமிருந்த சுமார் 70 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கோனவில பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)


## அலங்கார மீன் ஏற்றுமதி: இலங்கைக்கு 12 ஆவது இடம்

கொழும்பு, மே 04

அலங்கார மீன் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள நாடுகளில் இலங்கைக்கு 12 ஆம் இடம் கிடைத்துள்ளது.

உலக நாடுகளின் தேவையின் 3 சதவீதத்தை இலங்கை ஏற்றுமதி மூலம் பூர்த்தி செய்துள்ளது. இது தொடர்பாக எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் வார இறுதியில் தலா 3 நாட்கள் என்ற வீதம் புதிய கற்கை நெறியை முன்னெடுப்பதற்கு நாரா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 011 25 21 000 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)



## கீத் நொயார் கடத்தல்: விசாரணை வளையத்துள் சரத் பொன்சேகா

கொழும்பு, மே 04

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான சரத் பொன்சேகாவிடம் வாக்கு மூலத்தைப் பதிவு செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கல்கிசை நீதிமன்றத்தில் நீதிவான் லோசன அபேவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் சட்டத்தரணிகள், போர்க் காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா மீதே பிரதானமாக குற்றம்சாட்டப்பட்டது என்றும் , எனவே அவரும் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

அப்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சரத் பொன்சேகாவிடம் ஏற்கனவே வாக்கு மூலம் பெறப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவித்தனர்.

எனினும், சரத் பொன்சேகா முறைப்படி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்களின் சட்டத்தரணிகள் மேலும்கோரிக்கை விடுத்தனர்.

இதை அடுத்து, சரத் பொன்சேகாவிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்ட நீதிவான், தேவைப்பட்டால் அடுத்த விசாரணையின் போது, அதனைச் சுருக்கமாக வெளிப்படுத்த தயார் நிலையில் இருக்குமாறும் ஆணையிட்டார். (ஆ)

## மருத்துவராக நாடகம் போட்டு வங்கியில் மோசடி!

கம்பஹா, மே 04

கம்பஹா- உடுகம்பொல பிரதேசத்தில் நபர் ஒருவர் த்ன்னை மருத்துவராக அடையாளப்படுத்திக்கொண்டு வங்கியில் கடன் பெற்ற குற்றத்துக்காகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - பென்டியமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இவர் , ஒரு கோடியே 80 இலட்சம் ரூபா பணத்தைக் கடனாக பெற்றுள்ளார் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, குறித்த நபரிடம் இருந்து பல்வேறு பெயருடன் கூடிய 4 போலியான அடையாள அட்டைகள் , 2 சாரதி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் 11 கடவுச்சீட்டுக்கள் என்பன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஆ)

எதிரொலி
Ethiroli
வெள்ளி 04 மே 2018 ethirolimedia@gmail.com

# வரலாறு மட்டுமல்ல, வார்த்தையும் முக்கியம்

நுணலும் தன் வாயால் கெடும் என்பார்கள். ஆனால் பிறர் வாயால் கெட்ட நுணலாக மாறியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். தமிழ்த் தேசியத்தின் வழியில் பயணிக்கும் கட்சியின் தலைவரான அவரது மனதில் இடம்பிடிக்க வேண்டும் என்ற பேரவாவில், துதிபாடிகள் செய்த காரியம் அவரது அரசியல் தளத்தை ஒரே நாளிலேயே ஆட்டம் காணவைத்துவிட்டது.

ஒரு படத்தில் நடிகர் லிவிங்ஸ்டனைப் புகழ காசு கொடுத்து ஆட்களை, 'செட்' பண்ணியிருப்பார்கள். லிவிங்ஸ்டன் காரில் வந்திறங்கியவுடன் " வள்ளலே, மன்னனே, தளபதியே" என்று தொடங்கிய புகழ்மாலை, படிப்படியாக "தமிழகத்தின் அடுத்த முதல்வரே" " இந்தியாவின் வருங்கால ஜனாதிபதியே!" என்று நீண்டு, கடைசியாக, "அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியே வருக" என்று முடியும். இந்தப் புகழாரங்களால், அவர்களுக்கு காசு கொடுத்த லிவிங்ஸ்டனுக்கே கூச்சம் வந்து "கொய்யால, வாங்கின காசுக்கு மேலால கூவுறானே" என்று ஆனந்தக் கண்ணீர் விடுவார். ஆனால் நிச்சயமாக கஜேந்திரகுமாருக்கு, நல்லூர் முத்திரைச் சந்தி மேடையில் ஆனந்தக் கண்ணீர் வந்திருக்கப் போவது. விஜயகாந்துக்கு வருவது போல 'ஆத்திரங்கள்' வேண்டுமானல் வந்திருக்கலாம்.

பிரபாகரன் என்ற சொல் நெருப்பைப் போன்றது. அதனை யாரும் நல்லவிதமாக உபயோகிக்கலாம். அந்தளவில் பிரச்சினையில்லை. ஆனால் கொஞ்சம் இசகு பிசகாக அந்த ஒற்றைச் சொல்லைக் கையாண்டாலும் அவ்வளவுதான். எரித்துவிடும். இதுநாள் வரை அரசியல் ரீதியாக ஏனைய கட்சிகளைப் போலவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், பிரபாகரன் என்ற சொல் அரசியல் ஆதாயத்தையே அறுவடை செய்து கொடுத்திருந்தது. அந்த உஷாரில், முன்னணியின் தலைவரின் அடிப்பொடிகள் கூடுதலாக உணர்ச்சிவசப்பட்டதன் விளைவே "பிரபாகரன் இறந்து விட்டதால், கஜேந்திரகுமாரே அடுத்த–கடைசித் –தலைவர்" என்ற ஒப்பீடு வரைக்கும் எல்லை கடந்துவிட்டது.

வார்த்தைகள் அரசியலில் மிக முக்கியமானவை. பட்டிமன்றப் பேச்சாளர்கள் போல மேடைக்கு மேடை மாற்றி, மாற்றிப் பேச முடியாது. அப்படிப் பேசினால், "அப்போது அப்படிப் பேசிவிட்டு, இப்போது இப்படிப் பேசுகிறீர்களே?" என்று மக்கள் நாக்கைப் பிடுங்குவது போல கேட்பார்கள். அத்தோடு விட்டுவிடாமல் குறித்த அரசியல்வாதிகளைப் பற்றிய எதிர்மறையான கருத்துக்களைப் பரப்பி, அவர்களின் அரசியல் அஸ்தமிக்குமளவுக்கும் செய்துவிடுவார்கள். ஆனால் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்றாலும் சரி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்றாலும் சரி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்றாலும் சரி, வாயில் வருவதையெல்லாம் வார்த்தைகளாக வாந்தியெடுத்து விட்டுப் போய்விடுகின்றார்கள். அதனால் வரப்போகின்ற பின்விளைவுகளைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு அக்கறையிருந்ததில்லை. நல்லவேளையாக வடக்கின் முதலமைச்சர் மட்டும், முன்னரே பேசப் போகின்ற விடயங்களை எழுதி, தட்டச்சு செய்து கொண்டு வருவதால், அநேக சந்தர்ப்பங்களில் அவருக்கு இவ்வாறான தர்மசங்கடங்கள் நிகழ்ந்ததில்லை. இல்லாவிட்டால் இப்படி வார்த்தை வாந்திக்காரர்களின் பட்டியலில் அவரும் முதலிடத்தைப் பிடிப்பதில் முக்கிய போட்டியாளராக இருந்திருப்பார்.

இருப்பினும், மற்றவர்களைப் போல, அப்படிச் சொன்னதில் என்ன பிழை இருக்கிறது? என்று வீம்புக்கு மல்லுக்கட்டி, வாங்கிக் கட்டாமல், "இனிமேல் அப்படியான தவறான வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெறாது" என்று மன்னிப்புக் கேட்கும் வகையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அறிக்கை வரவேற்கப்படவேண்டியதே. தவறுகள் சகஜம்தான். அதேவேளை தவறுகளை ஒப்புக்கொண்டு, அதைத் திருத்தி, சரியான வழியில் நடக்கும் அரசியலே எப்போதும் அஸ்தமிக்காதிருக்கும். வரலாறு மட்டுமல்ல, வார்த்தையும் முக்கியம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# குருநகர் குடும்பங்களின் வதிவிட பிரச்சினை
# மாற்று யோசனையை வழங்கிய ஆளுநர்

யாழ்ப்பாணம்,மே 04

வதிவிடத்திற்கு காணி வழங்குமாறு போராட்டம் நடத்திய குருநகர் வாழ் குடும்பங்களுக்கு அரச உயர் அதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னர் மாற்று யோசனையினை வடமாகாண ஆளுநர் வழங்கியுள்ளார்.

மதுவரித்திணைக்களத்துக்கு சொந்தமான காணியில் அத்துமீறி குடியமர்ந்த மக்கள் அண்மையில் நாவற்குழியில் அமைந்துள்ள தேசிய வீட்டமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் குடியர்த்தப்பட்டனர்.

எனினும் காணி கிடைக்காத 15 குடும்பங்கள் பொலிஸாருக்கு ஒதுக்கப்பட்ட காணியில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து குடியமர்ந்தன. எனினும் பொலிஸாரினால் அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

பின்னர் தமக்கு காணி வழங்குமாறு கோரி ஆளுநர் செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களுடன் பேச்சு நடாத்திய ஆளுநர் நேற்று பொலிஸார் மற்றும் அரச உயர்அதிகாரிகளுடன் கலந்துரையாடி பதில் தருவதாக உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில் அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர்கள், சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், கிராமசேவையாளர்கள், காணி திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை நேற்று காலை அழைத்து பேசியிருந்தார்.

இதன்போது நாவற்குழியில் அரச காணிகள் அனைத்தும் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட நிலையில் மண்டைதீவு, யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளி, மருதங்கேணி போன்ற பகுதிகளில் காணப்படும் அரச காணிகளை குறித்த குடும்பங்கள் விரும்பும் பட்சத்தில் வழங்க முடியும் என்று அரசாங்க அதிபர் ஆளுநரிடம் தெரிவித்தார்.

அவர்களுக்கான குடிநீர் மற்றும் தற்காலிக கொட்டகைகளை உடனடியாக அமைப்பதற்கு உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த முடிவு போராட்டத்தில் ஈடுபட்ட குடும்பங்களுக்கு அறிவிக்கப்பட்டு மேலதிக தேவைகளுக்காக அரசாங்க அதிபரை தொடர்பு கொள்ளுமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

# மலேரியா மீள உருவாகாமல் இருக்க விழிப்புணர்வு நடவடிக்கை அவசியம்

யாழ்ப்பாணம்,மே04

இலங்கையில் மலேரியா நோயானது முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள நிலையில் அது மீள உருவாகாமல் பாதுகாக்க மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

உலக மலேரியா விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

உலக மலேரியா தினமானது ஏப்ரல் 25ஆம் திகதி கொண்டாப்படுகின்றது. இலங்கையில் மலேரியாவானது முற்றாகஅழிக்கப்பட்டுவிட்டது என 2012ஆம் ஆண்டு உலக சுகாதார தாபனம் தெரிவித்திருந்தது.

ஆனாலும் இலங்கைக்கு எந்த நேரத்திலும் மலேரியா நோய் பரவலாம் என்ற அச்சம் உள்ளது. வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் மலேரியா நோய் காவி கிருமிகளை கொண்டுவருகின்ற போது, அதனை காவிச் செல்லும் நுளம்புகள் இங்கே ஏராளம் உள்ளது. இதனால் மலேரியா நோயானது இலகுவாக பரவிட முடியும்.

எனவே இவற்றை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் மக்கள் மத்தியிலும் விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக தற்போது மலேரியாவை பரப்புகின்ற ஸ்ரவன்ஷி என்ற புதிய வகை நுளம்பு கண்டறியப்பட்டுள்ளது. இதனை கட்டுபடுத்துவது தொடர்பான சோதனை நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்க்கு காச்சல்கள் ஏற்படும் போது அவர்களை முழுமையான சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்களைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர மலேரியா நோய் உள்ள நாடுகளுக்கு செல்வோருக்கும் அந்நோய் தடுப்பு தொடர்பான மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இலங்கையில் இருந்து ஒழிக்கப்பட்ட மலேரியா நோயானது மீண்டும் நாட்டுக்குள் பரவாமல் கட்டுபடுத்த சுகாதாரத் துறையினர் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர் என்றார். இதேவேளை இன்று காலை 7 மணிக்கு நடைபவனியொன்றும் நடை பெற உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# விவாதத்துக்கு வருகிறது அரசாங்கத்தின் கொள்கை

கொழும்பு,மே 04

எதிர்வரும் 10 ஆம் திகதி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கை மீது நாடாளுமன்ற விவாதம் நடத்துவதற்கு, கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நேற்று இடம்பெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன கூறினார்.

இந்த அறிக்கை எதிர்வரும் 08ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட உள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு ஆரம்பத்தின் போது அரசாங்கத்தின் கொள்கை சம்பந்தமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்ற உள்ளார்.

இந்த அரசாங்கத்தின் கொள்கை மீது விவாதம் ஒன்றை நடத்துமாறு கூட்டு எதிர்க்கட்சியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்ததாக தினேஷ் குணவர்தன கூறினார்.

# மகிந்தவுக்கு கண்வைத்த சட்டபீட மாணவர்கள்



கொழும்பு,மே 04

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, இலங்கை சட்டப் பீட மாணவர்கள் அவமதித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சட்ட பீட மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு விளையாட்டில் யானைக்கு கண் வைத்தல் உட்பட பல்வேறு விளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

எனினும் இந்த மாணவர்களினால் யானைக்கு கண் வைக்கும்போட்டி வித்தியாசமானமுறையில்செய்யப்பட்டுள்ளது.

யானைக்கு கண் வைப்பதுக்கு பதிலாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் உருவத்தை வரைந்து மஹிந்தவுக்கு கண் வைப்பது போன்று இந்த விளையாட்டு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பேஸ்புக் உட்பட சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளன.

எனினும் புகைப்படத்தை பார்த்தவர்கள் யாரும் அதற்கு சிறப்பான கருத்துக்களை வெளியிடவில்லை எனவும், அதிகம் விமர்சிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இன்று நாளும் கோளும்

04.05.2018 வெள்ளிக்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 21 ஆம் நாள்

சதுர்த்தி மு.ப. 11.17 வரை
மூலம் மு.ப. 10.38 வரை
குளிகை மு.ப. 07.30-09.00
இராகுகாலம் 10.30- 12.00
சுபநேரம் காலை 09.30 - 10.30
எமகண்டம் பி.ப. 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுகம் | நற்செயல் | வெற்றி | நன்மை | சிக்கல் | இலாபம் | ஆதரவு | தேர்ச்சி | வீம்பு | தெளிவு | தனம் | இன்பம் |

# நியமனம் வழங்கக் கோரி ஊவாவில் உண்ணாவிரதம்

பதுளை, மே 04

ஊவா மாகாணத்தில் ஆசிரியர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு நியமனங்கள் வழங்கப் படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊவா மாகாண சபையின் முன்னால் நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு மாகாண அரச சேவை ஆணைக்குழுவால் 505 ஆசிரியர்களுக்கு நியமனங்களை வழங்குவதாகக்கூறி போட்டிப்பரீட்சைநடைபெற்றுள்ளது. இந்த நிலையில், ஒரு வருடமாகியும் நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்தப் போட்டிப் பரீட்சையில் 3 ஆயிரத்து 500 பேர் தோற்றியுள்ள போதிலும்,ஆயிரத்து 500 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இந்தநிலையில், குறித்த போட்டிப் பரீட்சையில் தவறு இருப்பதாகக் கூறி ஊவா மாகாணசபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார். இதனால், ஆசிரிய நியமனங்கள் வழங்குவது இடை நிறுத்தம் செய்யப்பட்டது.



"இந்த வழக்கைத் திரும்பப் பெற்று ஆசிரியர் நியமனங்களை உடன் வழங்க வேண்டும். நீதி கிடைக்கும் வரை சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்வோம்." எனப் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# பரிசு மோகத்தில் பறிபோனது 18 இலட்சம் ரூபா

கொழும்பு,மே 04

சமூக வலைத்தள மோசடியாளர்களிடம் பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், 18 லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து ஏமாந்த 5 பேரின் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்தில் பதிவாகி உள்ளன.

பரிசுப் பொருட்களை சுங்கத்தில் இருந்து விடுவிப்பதற்காக குறித்த மோசடியாளர்களின் வங்கிக் கணக்கில், அவர்கள் ஐவரும் பணத்தை வைப்பிட்டுள்ளனர் எனத் தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது என கணினி அவசரப் பதிலளிப்பு பாதுகாப்பு அதிகாரி ரொஷான் சந்தரகுப்த தெரிவித்துள்ளார்.

முகநூல், வட்சப், வைபர் முதலான சமூக வலைத்தளங்கள் ஊடாக நண்பராக அறிமுகமாகும் மோசடியாளர்களால், இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இவ்வாறான மோசடியாளர்களிடம் இருந்து சமூக வலைத்தளப் பாவனையாளர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தி உள்ளார். (ஆ)

# மாணவி மீது துஷ்பிரயோகம்

கொழும்பு,மே 04

தனமல்வில, செவணகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 13 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரைத் தொடர்ச்சியாகப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்த இளைஞன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

23 வயதுடைய திருமணமான ஒருவரே கைது செய்யப்பட்டவர் ஆவர்.

கடந்த ஆண்டு பாடசாலையில் இடம்பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின்போது, குறித்த சந்தேகநபர் மாணவியுடன் காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். பின்னர் இரவு நேரங்களில் மாணவியின் வீட்டுக்குச் சென்று அவரை அடிக்கடி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல் செய்து வந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் செய்த முறைப்பாட்டை அடுத்தே, சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஆ)

# கடந்த 4 மாதங்களில் 17,000 பேருக்கு டெங்கு

கொழும்பு,மே 04

இந்த வருடத்தின் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 17 ஆயிரத்து 28 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் 7 ஆயிரத்து 178 டெங்கு நோயாளர்களும், பெப்ரவரி மாதத்தில் 4 ஆயிரத்து 395 டெங்கு நோயாளர்களும், மார்ச் மாதத்தில் 3 ஆயிரத்து 303 டெங்கு நோயாளர்களும், ஏப்ரல் மாதத்தில் 2 ஆயிரத்து 152 டெங்கு நோயாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும் போது ஏப்ரல் மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 30.9 வீத டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தமிழர்களுடைய பலத்தை அழிக்கும் தேசியக் கட்சிகள்

அம்பாறை, மே 04

அரசியல் தீர்வுத்திட்டம் என்ற போர்வையில் தமிழர்களின் பலத்தை அழிக்கும் செயற்பாட்டைத் தேசிய கட்சிகள் முன்னெடுத்து வருகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாணவ மீட்பு பேரவையின் ஊக்குவிப்பு விழா நேற்றுமுன்தினம் மாலை கல்முனையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களும் தமிழர்களை ஏமாற்றுவதற்காகவே கைச்சாத்திடப்பட்டன. தமிழர்களுக்கான தீர்வுத் திட்டத்தை வழங்க கூடாது என்பதற்காகவே, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகொண்டு வரப்பட்டது. இதன் மூலம் இடம்பெற்ற கட்சித் தாவல் திட்டமிட்ட நடவடிக்கை." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# விவசாயத்தில் புதிய திட்டம்

கொழும்பு,மே 04

விவசாயத்துறையை நவீனமயப் படுத்தும் வகையில் புதிய திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது என மாகாணப் பிரதி திட்டப் பணிப்பாளர் எம்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உற்பத்தித் தரத்தை மேம்படுத்துதல், பெறுமதி சேர்த்தல் மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல் மற்றும் வர்த்தகத்துக்கான சந்தர்ப்பத்தை மேம்படுத்தல் என்பன இதன் நோக்கமாகும்.

மொத்த விவசாயத்துறையை உள்ளடக்கிய வகையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், சிறிய அளவிலான விவசாய உற பத்திகளை விரிவுபடுத்தலுக்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படு கின்றது. ஐந்து மாகாணங்களில் ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# 3 மாத காலப்பகுதியில் 91 எயிட்ஸ் நோயாளிகள்

கொழும்பு,மே 04

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதக் காலப்பகுதியில், எச்.ஐ.வி. நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட 91 எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய பாலியல் மற்றம் எயிட்ஸ் தடுப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவுப் பணிப்பாளர் டொக்டர் டிலானி ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

"கடந்த ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளான 75 பேர் கண்டுபிடிக்கப்பட்டிருந்தனர். அதன்படி இந்த ஆண்டில் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில் நோய்த் தொற்றுக்கு இலக்கானவர்க ளில் 39 பேர் ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் ஆவர். ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மத்தியில் அதிகளவில் எயிட்ஸ் நோய் பரவக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டும். தாயின் ஊடாகப் பிள்ளைக்கு எயிட்ஸ் நோய் பரவுவது கட்டுப்படுத்தப் பட்டுள்ளது." எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# இந்தியாவுக்குச் சென்றன 2 அனகொண்டாக்கள்

கொழும்பு,மே 04

இலங்கையின் தேசிய மிருகக்காட்சிச் சாலையில் இருந்து இந்தியாவின் மைசூர் சமராஜேந்திர விலங்கியல் பூங்காவுக்கு, 2 பச்சை அனகொண்டா பாம்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுப்பி வைக்கப்பட்ட இந்தப் பாம்புகள் ஆரோக்கியமான நிலையில் உள்ளதாகவும், அவை விலங்கியல் பூங்காவில் தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் உள்ளதாகவும் பூங்காவின் இயக்குநர் சி. ரவி சங்கர் தெரிவித்துள்ளார்.

"குறித்த இரு அனகொண்டாக்களும், 6 முதல் 8 அடி நீளமும், 15 கிலோ நிறை கொண்டதாகும். மைசூர் விலங்கியல் பூங்காவில் இருந்து நான்கு அரியவகை மான்கள் அனுப்பிவைக்கப்பட உள்ளன. ஆறு ஆண்டுகளின் பின்னர் இந்த விலங்குப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)




# விசுவமடுவில் வெடிபொருள் மீட்பு

விசுவமடு, ,மே 04

முல்லைத்தீவு விசுவமடு இளங்கோபுரம் காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைத்துவைக்கப்பட்டதாக கூறப்படும் ஒரு தொகுதி வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து, முல்லைத்தீவு நீதிமன்ற உத்தரவுக்கமையவே குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, 737 மோட்டார் குண்டுகள் மற்றும் கைக்குண்டுகள், கனரக துப்பாக்கி ரவைகள், ஆர்.பி.ஜி,துப்பாக்கி செலுத்திகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (ஆ)



# அரசை ஸ்திரமற்றதாக்க வகுக்கப்படுகிறது சூழ்ச்சி

## சொல்கிறார் அமைச்சர் அர்ஜுன



கொழும்பு, மே 04

நாட்டின் அரசியல் நிலைமை, ஸ்திரமாக இல்லை. தேர்தலில் வெற்றி பெறமுடியாத சில தலைவர்கள் அரசாங்கத்தை ஸ்திரமற்ற தன்மைக்கு மாற்றப் பல சூழ்ச்சிகளை செய்து வருகின்றனர் என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தில் நேற்று இடம்பெற்ற பிக்குமார்களுக்குத் தானம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"எமது நாட்டில் அரசியல் ஸ்திரமாக இல்லை. ஆனால், கடந்த காலத்தில் அரசியலில் பல விடயங்கள் இடம் பெற்றன. அவற்றை அதிகார ஆசைக் கொண்டவர்களே செய்தார்கள். மக்களால் தேர்தலில் வெற்றிபெற முடியாமல், பணத்தைக் கொண்டு வெல்ல முடியும் என்று நினைக்கும் சில நபர்களே இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்கப் பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

ஜனாதிபதியும் பிரதமரும் கலந்தாலோசித்தே அமைச்சரவை மாற்றத்தைச் செய்துள்ளனர். இருக்கின்ற 18 மாதங்கள் அரசாங்கத்துக்கு ஒரு முக்கியமான காலப்பகுதியாகும். ஆகவே, நாம் கடந்தகாலத்தில் விட்ட தவறுகளை சரிசெய்து முன்னோக்கிச் செல்வதையே எதிர்பார்க்கின்றோம்.

நாங்கள் செய்யும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சரியான முறையில் மக்களுக்கு பிரசாரம் செய்யவில்லை. இதுதான் எமது அரசாங்கத்தின் குறைபாடாகும்.

ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்தே இந்த அரசாங்கத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் பொதுமக்கள் சுதந்திர கட்சிக்கு அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனியாக ஆட்சியை அமைக்க தேர்தல் ஆணை கொடுத்திருப்பார்கள். ஆனால், அதிகாரத்தை இரண்டு பிரதான கட்சிகளுக்கு வழங்கியமையானது அரசியலை ஒருபக்கதில் வைத்துவிட்டு நாட்டைக் கட்டியெழுப்பவே ஆகும். அதையே நாம் கடந்த காலத்தில் செய்தோம்." என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

## இரத்தினக்கல் அதிகார சபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, மே 04

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் புதிய தலைவராகவும் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பேஷல பண்டார ஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுமுந்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். (ஆ)



## கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

கிளிநொச்சி, மே 04

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தின் இந்த ஆண்டுக்கான முதலாவது ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் துறை சார் திணைக்கள அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் கடந்த ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் மீளாய்வுகள் மற்றும் இந்த ஆண்டு முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. (ஆ)

## சிறுவர் துஷ்பிரயோகம்: தடுக்க வேலைத்திட்டம்

கொழும்பு, மே 04

சிறுவர்கள்மீது மேற்கொள்ளப்படும், துஷ்பிரயோகச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் விசேட வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது.

இதன் முதற்கட்டமாக அனைத்துக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மூவர் வீதம் தெரிவு செய்து, அவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி எச்.எம். அபேரத்ன தெரிவித்துள்ளார்.

கிராமமட்டத்தில்பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளங்கண்டு, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.

மேலும், தேசிய ரீதியில் சிறுவர் பாதுகாப்புப் படையணி ஒன்றும் உருவாக்கப்பட உள்ளது.

சிறுவர்கள் மீதான பெற்றோரின் கரிசனை குறைவடைவதே துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகரிக்கக் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாஜுதீன் படுகொலை:

## மகிந்தவின் பணியாளர்கள் தொடர்பில் விசாரணை

கொழும்பு, மே 04

ரக்பி வீரர் வசிம் தாஜுடீனின் படுகொலை தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் குடும்பத்தினருக்கு, சுமார் மூன்றரை ஆண்டுகள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்ட கடற்படையினர் பாவித்த, தகவல் பதிவுப் புத்தகங்கள் மற்றும் விடுமுறை சம்பந்தப்பட்ட தகவல்களைக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக இரகசிய பொலிஸார் நேற்று நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

வசிம் தாஜுதீனின் படுகொலை தொடர்பிலான வழக்கு, நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இந்தப் படுகொலை தொடர்பிலான விசாரணைகள் குறித்த முன்னேற்றஅறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போதே இரகசியப் பொலிஸார் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள, முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க, நாரஹேன்பிட்டி போக்குவரத்துப் பிரிவின் முன்னாள் நிலையப் பொறுப்பதிகாரி சுமத் குமார மற்றும் கொழும்பு முன்னாள் பிரதம சட்டமன்ற வைத்திய அதிகாரி, பேராசிரியர் ஆனந்த சமரசேகர ஆகியோர் முன்னிலை ஆகியிருந்தனர்.

இதன்போது, வசிம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட தினமான கடந்த 2012 ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி நள்ளிரவு, 12.32 மணிக்கு சந்தேகத்துக்குரிய குறுந்தகவல் ஒன்று, வசிமின் கையடக்கத் தொலைபேசிக்கு வந்துள்ளதாகவும், அந்தக் குறுந்தகவலானது ரஷ்மி த சில்வா என்பவரால் அனுப்பப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் இரகசிய பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (ஆ)

## நாடுமுழுவதிலும் 14 மீனவர்கள் கைது

கொழும்பு, மே 04

நாடளாவிய ரீதியில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் காரணமாக கடந்த சில தினங்களில் சுமார் 14 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடி, போதைப் பொருள்கடத்தல், தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஆ)

## ரிஷாத் பதியூதீன் நானான்ரை காலை எல்லே வாரிப்போட்டினமாம்..!

அவற்றை காலை வாரிப்போட்டினம் எண்டு ஒரு செய்தி. இண்டைக்கு பேப்பரிலை கிடக்கு. அவை இந்த முறை எத்தினைபேற்றை காலைவாரிப்போட்டு இருக்கினம் தெரியுமே? அப்ப ரிஷாத் பதியூதீன் இனிமேல் கொஞ்சம் கவனமாத்தான் இருக்க வேணும். இப்ப ரிஷாத் பதியூதீன் நானா என்ன சொல்ல வாறியள். தமிழ் தேசியக் கூட்டமைப்போடை சேந்து ஆட்சி அமைச்சிருக்கலாம் எண்டுதானே? அப்பிடிச் சேந்து. ஆட்சி அமைச்சிருந்தால் என்ன நடந்திருக்கும்? அது தெரிஞ்சுதான் அவை மாட்டனெண்டு இருக்கினம். இவ்வளவு காலமும் அஷ்ரப் துவக்கம் உங்கடை ஆக்கள் எல்லாரும் எத்தினை தடவை அவையின்ரை காலைவாரி இருப்பியள்? இப்ப ஒருக்காத்தானே அவை உங்கடை காலை வாரி இருக்கினம். சரி வாரினதோடை மாத்திரம் விட்டிட்டினம் எண்டு சொல்லிச் சந்தோஷப்படுங்கோ. தள்ளி விழுத்தேல்லைத்தானே?

யுத்த காலத்திலை பாதிக்கபட்டிருக்கிற வன்னி மக்களை நல்லாக்குவம் எண்டுதானே பேசப்போனியள். அப்ப நீங்கள் வேறை ஆரோடையும் பேசி இருக்கலாம். மக்களின்ரை முன்னேற்றத்திலை உண்மையான அக்கறை உள்ள ஆளிட்டைப் பேசினால் சிலவேளை சரிவந்திருக்கும். நீங்கள் ஏன் சுமோட்டைப் பேசின்னீங்கள்? ஆர் அவரோடை பேசச்சொன்னது? "தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை முக்கியஸ்தரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் எம்.பியுடன் பேசின்னான்" எண்டு சொல்லுறியள்? பிறகு சொன்னது சரி, ஆனால் முன்னம் சொன்னளியள் கூட்டமைப்பின்ரை முக்கியஸ்தர் எண்டு அது பிழை. ஆர் அவரை முக்கியஸ்தர் எண்டு சொன்னது? நீங்கள் முக்கியஸ்தர் எண்டு நினைச்சால் சரியோ? அவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை பேச்சாளர் எண்டுதான் சொல்லினம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுக்கிற முடிவை அவர் வெளியிலை தெரிவிக்கிறதுதான் அற்றை வேலையே ஒழிய அவர் தான் நினைச்ச மாதிரி ஒண்டும் செய்யேலாது எண்டுதான் எங்களுக்குச் சொன்னவை. அதோடை இந்தியாவிலை உள்ள சுப்பிரமணிய சுவாமி மாதிரித்தான் சுமந்திரன் எண்டு சுரேஸ் பிரேமச்சந்திரன் சொன்னவர். வேறை ஆரேன் சொன்னால் நான் நம்பி இருக்கமாட்டன். சொன்னது அவரோடை கூட இருந்த சுரேஸ் எல்லே? சுப்பிரமணிய சுவாமி ஒரு விளையாட்டுக் காரன் எண்டு எல்லாருக்கும் தெரியும். பொறுப்பான ஆள் இல்லை எண்டுதான் சனம் கதைக்கிறவை. அவற்றை கட்சியிலை பாட்டும் நானே, பாவமும் நானே. எண்ட மாதிரி எல்லாம் அவர்தான். அவருக்கு ஊர் உலகத்திலை நல்ல பேரும் இல்லை. எப்பவும் இடக்கு முடக்காக் கதைக்கிறதுதான் அவற்றை வேலை. நான் சொல்லுறது பிழை எண்டு கண்டால் நேற்றையான் பேப்பரை ஒருக்கா எடுத்துப் பாருங்கோ. சிவத்தச் சட்டையைப் போட்டுக் கொண்டு ஜே.வி.பி கட்சியின்ரை கூட்டத்திலை முன்னுக்கு நிண்டு சுமந்திரன் கத்திறதை. ஆராவது மற்றக் கட்சியின்ரை மேதினக் கூட்டத்திலை போய் நிண்டு உப்பிடிக் கத்துவங்களே? அப்ப தனக்கெண்டு பொலிசி இல்லாத ஆள்தான் உவரெண்டு விளங்குதே? அப்ப சுரேஸ் சொன்னது சரியெல்லே?

அப்ப உவற்றை நோக்கம் என்ன எண்டு விளங்கினால் சரி. இனியாவது பேசிற ஆக்களைப் பாத்துப் பேசுங்கோ. கண்ட கண்ட பொலிசி இல்லாததுகளோடை கதைச்சிட்டுப் பிறகு சொல்லாதையுங்கோ காலைவாரிப் போட்டினம் எண்டு.

இப்ப அழுது பிரயோசனம் இல்லை நானா. முன்னமே நீங்கள் இதைச் சரியா யோசிச்சு இருக்கவேணும். சரி விடுங்கோ. அடுத்த தடவை உவங்களை ஒரு கை பாப்பம்.

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## வரலாற்று... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக சுதந்திர தினமான நேற்று நடத்தப்பட்டது.

இவ்வஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேனாமுனை போராளிகளாக, அடக்குமுறைக்கு எதிரான மக்களின் குரலாக, கொலைகள், அநியாயங்களுக்கு எதிராகவும் தங்களுடைய பேனா மைகளினால் எழுதிய ஊடகப் போராளிகள் பலர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வுலகத்தில் எத்தனையோ விதமான போர்கள், குழுச் சண்டைகளுக்குள் துன்ப துயரங்களுக்கு மத்தியில் உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டிய ஜனநாயக வாதிகள் ஊடகவியலாளர்களே.

இந்த ஜனநாயகவாதிகள் கொல்லப்பட்டமையை நினைவு கூர்வதற்கு இலங்கையில் வேறு எங்கும் இல்லாத வகையில் யாழ்.மாநகரத்தின் மத்தியிலே ஒரு நினை தூபி அமைக்கப்பட்டிருப்பது யாழ்.மாவட்டத்திற்கே பெருமை சேர்க்கும்.

இறுக்கமான சூழலில் ஊடகவியலாளர்கள் பல்வேறு களங்களைக் கண்டவர்கள். ஒவ்வொரு ஊடக போராளிகளும் எவ்வாறு தங்களது தற்துணிவோடும், உண்மையை உலகுக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடும் இரண்டுக்கு மேற்பட்ட குழுமங்களுக்கு மத்தியில் நின்று போராடி பணியாற்றியவர்கள்.

யாழ்.பல்கலைக்கழகத்திலே முதன்முறையாக பொங்கு தமிழ் என்ற நிகழ்வினை நடத்திய போது, ஊடகப் போராளிகள் எவ்வாறு பயங்கரமான சூழலிலும் மாணவர்களோடு இணைந்து பயணித்திருந்தார்கள். இதன் பின்னர்தான் ஊடகவியலாளர் நிமலராஜன் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

நிமலராஜனின் கொலையை கண்டித்து யாழ்.மாவட்டச்செயலகம்வரை அமைதிப் பேரணியாக சென்று அறிக்கை ஒன்றினையும் கையளித்திருந்தோம். இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் ஊடகவியலாளருக்காக யாழ். பல்கலைக்கழக சமூகம் அன்று களமிறங்கியது.

இன்றுவரை யாழ்.பல்கலைக்கழகம் தேசியத்திற்கான உணர்வினை வெளிப்படுத்தி நிற்பதற்கும் ஊடகவியலாளர்களே காரணமாக உள்ளார்கள்.

யாழ்.நகர மத்தியிலே அமைந்துள்ள கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபி நகர மயமாக்கலின் பின்னரும் அதே மையத்தில் அமைந்திருக்கும். புதுப் பொலிவு பெற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அத்தூபி கருதப்பட்டு, யாழ்.மாநகர சபையினால் பாதுகாக்கப்படும் என்றார்.

## ஊடகவியலாளர்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ் நகரிலுள்ள ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போராட்ட காலங்களில் துணிச்சலாக ஊடகவியலாளர்கள் செய்திகளை கொண்டு சென்றிருந்தனர். அவ்வாறு கொண்டு சென்றிருந்த பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். அதே போன்று இறுதி யுத்தத்திலும் பல ஊடகவியிலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களில் லசந்த விக்கிரமதுங்க போன்ற தெற்கு ஊடகவியலாளர்கள் சிலரது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் அந்த விசாரணைகளும் முழுமை பெறாது இடைநடுவிலேயே நிற்கின்றன. அதே நேரம் கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் விசாரணைகள் எவையும் ஆரம்பிக்கப்படாமலேயே இருக்கின்றது.

ஆகவே கொல்லப்பட்ட ஊடகவியிலாளர்கள் தொடர்பான விசாரணைகள மேற்கொள்வதற்கு விசேட ஆணைக் குழுக்களை அரசாங்கம் அமைக்க வேண்டும். அவ்வாறு விசாரணைகளை முன்னெடுப்பதனூடாக குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியும். அதனூடாகவே ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்க முடியும்.

எனவே கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து காலம் தாழ்த்தாது நீதியை வழங்க வேண்டும் என்றே வடக்கு மாகாண சபை ஊடாக கோருகின்றோம் என அவர் தெரிவித்தார்.

## சிறை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளார். அதனால் வாகனம் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சந்தேநபர் சார்பில் அவரது சட்டத்தரணி நகர்த்தல் பத்திரம் அணைத்தமைக்கமைவாக இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி காயத்திரி சைலவன் முன்னிலையில் விசாரணை இடம்பெற்றது.

சந்தேகநபர் யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியிலுள்ள ரெஸ்ரோரன்டில் மது அருந்திக்கொண்டிருந்தார்.

அங்கு மது அருந்த வந்த யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவருக்கும் சந்தேகநபருக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

அதனால் இரு தரப்பும் மேல் மாடியிலிருந்து இறங்கி வந்து வீதிவரை கைகலப்பபில் ஈடுபட்டனர். அதன்போதே சிறைச்சாலை வாகனத்தின் கண்ணாடி உடைந்தது.

சந்தேகநபர் முறைப்பாட்டாளர்களின் பொறுப்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதனால் அவருக்கு அச்சுறுத்தல் உண்டு. எனவே சந்தேநபரை பிணையில் விடுவிக்கவேண்டும் என்று சந்தேகநபரின் சட்டத்தரணி மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

அதனை ஆராய்ந்த மேலதிக நீதிவான், முறைப்பாட்டாளரின் பாதுகாப்பில் சந்தேகநபரைத் தடுத்துவைப்பது அச்சுறுத்தலானது எனச் சுட்டிக்காட்டி அவரை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

சிறைச்சாலை ஜெயிலர் உள்பட 3 உத்தியோகத்தர்கள் சிறைச்சாலை வாகனத்தில் மது அருந்தச் சென்றமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தமது தவறிலிருந்து தப்பிக்கவே அவர்கள் தமது வாகனம் வீதியில் வைத்து தாக்கப்பட்டது என பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

## 13 தீர்வைத்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையாது. இதனை உணர்ந்து கொண்டதாலேயே மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அன்று மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவை நியமித்தார்.

பிரிக்கப்படாத நாட்டில் அனைத்து இன மக்களும் சம அதிகாரத்துடன் வாழ வேண்டும். சம அளவான அதிகாரங்களுடன், ஒரே நீதியின் கீழ் ஒன்றிணைந்து வாழ வேண்டும். இதுவே அவரது எதிர்பார்ப்பாக காணப்பட்டது. 13ஆவது சீர்திருத்தத்தில் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக சில விடயங்கள் முன்வைக்கப்பட்டது. ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அது நிரந்தர தீர்வாக அமையவில்லை. மாறாக நாடாளுமன்ற தெரிவிக்குழுக்கள் ஊடாக தீர்வை நோக்கி தமிழ் மக்களின் பிரச்சினைகள் நகர்த்தப்பட்டது.

இதனப்படையில் பிரேமதாசவினால் நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்க ஆணைக்குழுவினால் தேசிய பிரச்சினை தொடர்பில் சிறந்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. குறித்த ஆணைக்குழுவுக்கான தலைமைத்துவமானது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் அல்லாது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நியமிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்த அரசியல் தலைமைத்துவத்தை துரதிஷ்டவசமாக இழந்து விட்டோம் என தெரிவித்துள்ளார்.

## சர்வதேச... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான பிரதான அஞ்சலியை செலுத்தினார்.

மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் தனது அஞ்சலியை செலுத்தினார். தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு சக ஊடகவியலாளர்கள் மலர் அஞ்சலிகளை செலுத்தினர்.

## பிரபாவுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் தலைவர் இ.எ.ஆனந்தராஜா தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு நிகரான தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்று கூறினார் என்றும் அதனை கஜேந்திரகுமாரே அவரூடாக திட்டமிட்டு செய்வித்தார் என்றும் திரிபுபடுத்தி வெளியிடப்பட்ட செய்திகள் தவறானவை.

அவை எமது கட்சி மீதான காழ்ப்புணர்வாலும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான காழ்ப்புணர்வாலும் செய்யப்படும் பொய் பிரசாரங்கள்.

தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு நிகர் அவர் மட்டுமே என்பதும் அவருடன் யாரையும் ஒப்பிட முடியாதென்பதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட கட்சியிலுள்ள அனைவரதும் உறுதியான நிலைப்பாடாகும்.

எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு தலைமைதாங்கும் தகுதி கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு உண்டு என்று ஆதரவாளர்கள் கூறும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்களிடம் அவ்வாறு தன்னை குறிப்பிட வேண்டாம் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் ஒருவராகவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செயற்பட்டு வருகின்றார்.

தேசியத் தலைவர் பிரபாகரன் முள்ளிவாய்க்கால் வரை பேச்சுவார்த்தை மேசையில் எத்தகைய அரசியல் நிலைப்பாட்டை இனப்பிரச்சினைத் தீர்வாக வலியுறுத்திவந்தாரோ அந்நிலைப்பாடுகளை விட்டுக்கொடுக்காமல் கொண்டு செல்ல வேண்டும் என்பதனை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அடிக்கடி வலியுறுத்துவதுண்டு.

கஜேந்திரகுமார் தன்னை தமிழ் இனத்தின் தலைவராக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படும் ஒருவர் அல்ல. அதனாலேயே வடக்கு மாகான முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரனை கொண்டுவரப்பட்ட போது அப்பிரேரணையை தோற்கடிப்பதற்காகவும் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாகவும் இளைஞர்களை திரட்டிச் சென்று நடாத்திய போராட்டத்தில் விக்னேஸ்வரன் தலைமையேற்க வரவேண்டுமென பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக கருத்துப்பட ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உறுதியற்ற நிலையிலுள்ள ஈபிஆர்எல்எவ், புளொட், த.வி.கூட்டணி ஆகிய தரப்புக்களை கைவிட்டு விக்னேஸ்வரன் ஐயா பேரவை உறுப்பினர்களையும் பொது அமைப்புக்களையும் இணைத்தவாறு கட்சியை உருவாக்கி எம்மை கூட்டுக்கு அழைத்தால் அவரது தலைமையில் இணைந்து தேர்தலில் போட்டியிடத் தயார் என்பதனை தெரிவித்திருந்தார்.

எதிர்காலத்தில் தன்னை தமிழினத்தின் தலைவர் என்ற அடிப்படையில் யாரும் கருத்துக்கூறக்கூடாது என்பதனை உறுப்பினர்களுக்கு உறுதிபடத் தெரிவித்துள்ளார் என்பதனையும் கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## படைக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

574 ஆவது படைப்பிரிவு முகாம் அமைந்துள்ளது.

குறித்தமுகாம், மக்களது காணிகள் பலவற்றை சுவீகரித்து அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் இந்த காணிகளை விடுவிக்குமாறு பலதடவைகள் கோரியும் குறித்த காணிகள் இராணுவத்தால் விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில் நேற்றையதினம் நில அளவை திணைக்கள அதிகாரிகள் குறித்த காணியை அளவிட செல்வ்தனை அறிந்த மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து இராணுவ முகாம் வாசலில் வைத்து நில அளவீட்டு பணிக்காக சென்றவர்களை திருப்பியனுப்பியுள்ளனர்.

இதனை காணி உரிமையாளர்கள் யாருக்கும் அறிவிக்கவில்லை எனவும் இரகசியமான முறையில் அளவீடுசெய்து இராணுவத்துக்கு வழங்கும் சதித் திட்டமாக இதைப் பார்ப்பதாகவும் எல்லைப்படுத்தல் நடவடிக்கைக்காக காணிகளை அளவிடுவதாயின் உரிமையாளர்களான தங்களையும் அழைத்து காணிகளை அளந்து, தமது காணிகளை தம்மிடம் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து காணி அளவிடுவதற்காக .சென்ற நில அளவையாளர்கள் திரும்பி சென்றுள்ளனர்.

இந்தநில அளவீட்டுக்கு எதிப்பு தெரிவித்து மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிரேம்காந்த் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச உறுப்பினர்களான மு. முகுந்தகஜன் சத்தியசீலன் உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டு நில அளவீட்டு பணிகளை தடுத்து நிறுத்தியிருந்தனர்.

## காரைநகரிலும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்தினால் பணி தொடங்க உள்ள நிலையில் கடற்படையினர் திடீரென முகாம் அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பாடசாலைக் காணியில் கடற்படையினர் முகாம் அமைப்பதை தமிழ் மக்கள் பிரதிநிதிகள் வேடிக்கை பார்த்துகொண்டிருப்பதாக பாடசாலை சமூகம் விசனம் வெளியிட்டுள்ளது.

## காலைவாரியது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)


கூட்டமைப்பு காலைவாரியதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச சபையின் தவிசாளர், பிரதித் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை வரவேற்கும் விழா, நேற்று காலை பேசாலையில் அமைந்துள்ள பிரதேச சபையின் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்டத்தை கட்டியெழுப்பும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைத்து, அதன்மூலம் மக்களின் வாழ்வியலில் மாற்றங்களை ஏற்படுத்த நாங்கள் எண்ணினோம்.

அந்தவகையில், மக்கள் காங்கிரஸின் தலைவரான நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் எம்.பியுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்கள் வெற்றிபெற்ற சபைகளில் எமது கட்சி இரண்டாம் நிலையாகவும்,. நாங்கள் வெற்றிபெற்ற சபைகளில் அவர்களது கட்சி இரண்டாம் நிலையாகவும் இருந்து, தமிழ் - முஸ்லிம் நல்லுறவுக்கான பாலமாக புதிய ஆட்சியை மலரச் செய்வோம் என்று பேசினோம்.

எமது யோசனைக்குச் செவிசாய்த்து ஆரம்பத்தில் இதற்குச் சம்மதித்தவர்கள், உள்ளூராட்சி சபைகளை அமைப்பதற்கான காலம் நெருங்கி வந்துகொண்டிருந்த போது, நாங்கள் வெற்றிபெற்ற சபைகளில் எங்களை வீழ்த்த வேண்டுமென்று செயலாற்றினார்கள். எம்மைத் தவிர்த்து எல்லாக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு, எமக்குக் கிடைத்த மக்கள் ஆணையை சிதறடிப்பதற்கு அவர்கள் முயற்சிகளில் வலுவாக ஈடுபட்டார்கள். இந்த நடவடிக்கைகள்தான் வன்னி மாவட்ட உள்ளூராட்சி சபைகளில், சபைகளை அமைப்பதில் முரண்பாடுகளும், சமநிலையற்ற தன்மையும் ஏற்படக் காரணமாயிற்று என தெரிவித்தார்.



# ராஜஸ்தானில் புழுதிப் புயல்: 22 பேர் சாவு!

ஜெய்ப்பூர், மே 04

ராஜஸ்தான் மாநிலத்தில் புழுதிப் புயலுடன், பெய்த கடும் மழையில் சிக்கி, நேற்றுமுன்தினம் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் கடந்த சில தினங்களாக அடை மழை பெய்து வருகிறது. அத்தோடு பலத்த காற்றும் வீசுவதால் மக்களில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. காற்று மற்றும் மழையால் பல இடங்களில் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் வீதிகளில் சரிந்துள்ளன. மேலும், சில இடங்களில் கட்டடங்களும் இடிந்து விழுந்துள்ளன.

மழை மற்றும் புழுதி புயல் காரணமாக அதிகமான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பருவமழை தொடங்கி இருப்பதால், ராஜஸ்தான் மற்றும் அரியானா மாநிலங்களில் கடும் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# லிபியா தேர்தல் ஆணையத்தில் தற்கொலைப்படைத் தாக்குதல்





டிரிபோலி,மே 04

லிபியாவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற தற்கொலைப்படைத் தாக்குதலில், 11 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.

லிபியாவின் டிரிபோலி நகரில் தேசிய தேர்தல் ஆணையத்தின் தலைமையகம் அமைந்துள்ளது. அங்கு சென்ற பயங்கரவாதிகள் , அங்கிருந்தவர்களை நோக்கித் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். மேலும், தங்கள் உடம்பில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதனால், அப்பகுதியே கரும்புகை மண்டலமாகக் காணப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

லிபிய ஜனாதிபதி முகமது கடாபி , கடந்த 2011 ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சியாளர்களின் வன்முறைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அதன்பின், அங்கு வன்முறைச் சம்பவங்களால் நாடு சீர்குலைந்து போனது.

கடாபியின் ஆட்சியில் தேர்தல் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டு இருந்தது. அவரது மரணத்துக்குப் பின்னர் 2012 ஆம் ஆண்டில் தேர்தல் நடைமுறை உருவானது. அங்கு நம்பகத்தன்மை வாய்ந்த மற்றும் சுயாட்சி தன்மையுடன் செயற்படக் கூடிய அமைப்புகளில் ஒன்றாக தேர்தல் ஆணையம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



# இராணுவ விமானம் விபத்து: 9 அமெ. வீரர்கள் உயிரிழப்பு


வொஷிங்டன்,மே 04

அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான விமானம் விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 9 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் ஜோர்ஜியா நகரில் இருந்து, ஹெர்குலஸ் என்ற சி-130 ரக விமானத்தில் 9 இராணுவ வீரர்கள் பயணம் செய்தனர். காலை 11:30 மணியளவில் சாவன்னா விமான நிலையம் அருகில் அந்த விமானம் சென்று கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் அந்த விமானத்தில் பயணம் செய்த 9 இராணுவ வீரர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். சமீப காலமாக அமெரிக்காவில் இராணுவ விமானங்கள் விபத்துக்குள்ளாவது தொடர் கதையாகி வருகிறது. கடந்த மாதம் ஏற்பட்ட இராணுவ விமான விபத்துகளில் சிக்கி ஐந்து இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# அவுஸ்ரேலியா, பிரான்ஸ் சீனாவுக்கு எச்சரிக்கை



சிட்னி, மே 04

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் எந்தவொரு நாடும் ஆதிக்கம் செலுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரான்ஸ், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

அந்தப் பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்தி வருவதாகக் கூறப்படும் சீனாவுக்கு மறைமுக எச்சரிக்கை விடுக்கும் விதமாகவே அந்த நாடுகள் இவ்வாறு கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசசுற்றுப் பயணமாக அவுஸ்ரேலியா சென்றுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரோன், அந்த நாட்டு பிரதமர் மால்கம் டர்ன்புல்லை நேற்றுமுன் தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே தொழில்துறை மற்றும் சூரிய மின்சக்தி தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதன் பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக இணைந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தனர்.

“இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் விதிமுறைகளைக் கடைப்பிடித்து வளரும் நாடுகளைக் காப்பதுதான் முக்கியம். அந்தப் பகுதியில் அமைதிக்கான சமநிலையும் காக்கப்பட வேண்டும். இதேபோல், எந்தவொரு ஆதிக்கத்தையும் வளர விடக்கூடாது என்பது முக்கியம்.

சீனாவின் பொருளாதார வளர்ச்சியை வரவேற்கும் அதேவேளை இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் அனைத்துத் தரப்புகளும் இணைந்து செயற்படுவது அவசியம்.” எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, செய்தியாளர்கள் சந்திப்பின் முடிவில், தமக்கு வரவேற்பு அளித்தமைக்காக அவுஸ்ரேலிய ஜனாதிபதிக்கு பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரோன் நன்றி தெரிவித்தார். அப்போது அவர், “உங்கள் வரவேற்புக்கு நன்றி. உங்கள் இனிமையான மனைவியின் வரவேற்புக்கும் நன்றி.” என்று கூறியுள்ளார். இவ்வாறு அவர் வர்ணனையுடன் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# என் மகன் மகிழ்வனுக்கு சிறந்த இயக்குநர் விருது

புதுடில்லி, மே 04

புதுடில்லியில் நடைபெற்ற திரைப்பட விழாவில், ‘என் மகன் மகிழ்வன்’ படத்தை இயக்கிய லோகேஷ் குமாருக்கு சிறந்த இயக்குநருக்கான விருது கிடைத்துள்ளது.

ஆண் ஓரின ஈர்ப்பை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள படம் ‘என் மகன் மகிழ்வன்’. லோகேஷ் குமார் இயக்கியுள்ள இந்தப் படம், ஆண் ஓரின ஈர்ப்புப் பற்றி தமிழில் எடுக்கப்பட்டுள்ள முதல் படமாகும். இதில், அனுபமா, குமார், அபிஷேக் ஜோசப், அஸ்வின்ஜித், கிஷோர், ஜெயப்பிரகாஷ் எனப் பலர் நடித்துள்ளனர். இரத்தின குமார் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு, சாந்தன் இசையமைத்துள்ளார். இந்தப் படத்துக்கு தமிழ் சினிமா தணிக்கைக் குழு அதிகாரிகள் A/V சான்றிதழ் அளித்துள்ளனர்.

புதுடில்லியில் நடைபெற்ற எட்டாவது தாதா சாகேப் பால்கே திரைப்பட விழாவிலேயே, சிறந்த இயக்குநருக்கான விருது லோகேஷ் குமாருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, ஹைதராபாத்தில் நடைபெற்ற இரண்டாவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த படத்துக்கான விருதையும், புனேவில் நடைபெற்ற அவுட் ரூ லவ்டு - புனே சர்வதேச எல்.ஜி.பி.டி. திரைப்பட விழாவில் சிறந்த விழாப்பட விருதையும் பெற்றுள்ள இந்தப் படத்துக்கு, இது மூன்றாவது விருதாகும்.

எதிர்வரும், 25 ஆம் திக்தி நடைபெற இருக்கும் கஷிஷ் - மும்பை சர்வதேச எல்.ஜி.பி.டி. திரைப்பட விழாவிலும், ஜூன் மாதம் லண்டனில் நடைபெற இருக்கும் இந்தியத் திரைப்பட விழாவிலும், ஜூலை மாதம் கனடாவில் நடைபெற இருக்கும் இந்தியத் திரைப்பட விழாவிலும் இந்தப் படம் திரையிடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



# விலகினார் திமுத் கருணாரத்ன

கொழும்பு,மே04

இலங்கை கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளுக்கு டெஸ்ட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், இலங்கை டெஸ்ட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திமுத் கருணாரத்னவின் கை விரலில் முறிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மாகாண அணிகளுக்கு இடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகியது. இந்த தொடருக்காக பயிற்சி வலையில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போதே திமுத் இவ்வாறு உபாதைக்கு உள்ளாகியுள்ளார்.

அண்மையில் நிறைவடைந்த மாகாண அணிகளுக்கு இடையிலான நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில், திமுத் கருணாரத்ன தம்புள்ளை அணிக்கு தலைமை தாங்கியிருந்தார். எனினும் குறித்த தொடரில் 6 இன்னிங்ஸ்களில் விளையாடியிருந்த அவர் ஒரு அரைச் சதத்தை மாத்திரமே பெற்றிருந்தார்.

இந்நிலையில், மாகாண அணிகளுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடருக்கும் அவர் அதே அணியில் இடம்பெற்றிருந்தார். எனினும், தற்போது ஏற்பட்டுள்ள உபாதையினால் அவர் இத்தொடரிலும், இலங்கை அணி அடுத்து மேற்கொள்ளவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியுடனான டெஸ்ட் சுற்றுத் தொடரிலும் விளையாடமாட்டார் என நம்பப்படுகின்றது.





## ஆஸி அணிக்கு பயிற்சியாளர் நியமனம்

சிட்னி,மே 04

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜஸ்டின் லாங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜஸ்டின் லாங்கர் தேசிய அணிக்காக 105 டெஸ்ட் மற்றும் 8 ஒருநாள் போட்டிகளில் விளையாடி உள்ளார். அவர் கடந்த 2007-ம் ஆண்டு சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

இது குறித்து பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜஸ்டின் லாங்கர் நிருபர்களிடம் கூறியதாவது:

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் மீது ஏராளமான எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. வீரர்களின் நடத்தைகள் அனைத்தும் இதற்கு முன் நல்லவிதமாகவே இருந்தது. அதை நாம் தொடர்ந்து கடைப்பிடித்திருந்தால், இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். எப்போதுமே நமக்கான மரியாதையைத் தக்கவைத்து இருப்பது மிகவும் அவசியமாகும். உலகில் தங்கத்தைக் காட்டிலும் விலை மதிப்பு மிக்கது மரியாதையாகும்.

நம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தைகள் என்னவென்று தெரியும். போட்டிக்கும், ஆக்ரோஷத்துக்கும் இடையே வேறுபாடு இருக்கிறது. அதில் நாம் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

நாம் கிரிக்கெட்டில் சிறந்த வீரர்களையும், சிறந்த மனிதர்களையும் ஊக்குவிக்க வேண்டும். நாம் சிறந்த மனிதர்களை ஊக்குவித்தால், எதிர்காலத்தில் அவுஸ்ரேலிய அணிக்குச் சிறந்த வீரர்கள் கிடைப்பார்கள். என்னைப் பொறுத்தவரை அடிப்படை கட்டமைப்புக்கு இது மிகவும் அவசியமாகும்.

இதற்கு முன் என்ன நடந்ததோ அதில் இருந்து பாடம் கற்று இருக்கிறோம். ஸ்மித், வோர்னர் இருவரும் சிறந்த வீரர்கள், ஆனால், தவறு செய்தது மிகுந்த வியப்புக்குள்ளாக்குகிறது. நாம் அனைவரும் தவறு செய்பவர்கள்தான், ஆனால், அதில் இருந்து தான் நாம் சிறப்பானவற்றை கற்று வருகிறோம் என்றார்.

# கொல்கத்தா பழிக்குப் பழி



கொல்கத்தா, மே 04

முதல் சுற்றில் சென்னை அணியிடம் தோற்றமைக்கு நேற்றுப் பழிதீர்த்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும் இடையிலான ஐ.பி.எல் போட்டி. கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கப்டன் தினேஷ் கார்த்திக் பந்து வீச்சைத் தேர்வு செய்தார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் நிதிஷ் ராணாவுக்குப் பதிலாக ரிங்கு சிங் சேர்க்கப்பட்டார்.

வட்சன், டு பிளிசிஸ் ஆகியோர் சென்னையின் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். இருவரும் ஓரளவுக்கு சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தார்கள்.

6 ஆவது ஓவரில் சுனில் நரேனின் முதல் பந்தில் டு பிளிசிஸ் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அவர் 15 பந்தில் 4 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 27 ஓட்டங்கள் சேர்த்தார்.

அடுத்து வட்சனுடன் ரெய்னா ஜோடி சேர்ந்தார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 10 ஓவரில் 1 விக்கெட் இழப்புக்கு 90 ஓட்டங்கள் குவித்திருந்தது. இதனால் 200 ஓட்டங்களை இனனொரு தடவையும் சென்னை எட்டிவிடும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் மீண்டும் சுனில் நரேனில் பந்தில் , வட்சன் 36 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

வட்சன் அவுட்டான சிறிது நேரத்தில் ரெய்னாவும் 31 ஓட்டங்களோடு வீழ்ந்தார். அதன்பின் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஓட்டக்குவிப்பு வேகம் சரிய ஆரம்பித்தது. 14.4 ஆவது ஓவரில் அம்பதி ராயுடு 21 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதனால் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்து பொறுப்பு டோனியின் தலையில் விழுந்தது. டோனி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த சென்னை சூப்பர் கிங்ஸ் 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்களை எடுத்தது. டோனி 25 பந்தில் 4 சிக்ஸர், ஒரு பவுண்டரியுடன் 43 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை களத்தில் நின்றார்.

பதிலளித்து ஆடிய கொல்கொத்தா அணியின் கிறிஸ் லின் அதிரடித் தொடக்கம் கொடுத்தாலும் 12 ஓட்டங்களோடு ஆஷிப்பின் பந்தில் முதல் ஓவரிலேயே வெளியேறினார். அதன் பின்னர் சுனில் நரேன் அடுத்தடுத்த இரு பந்துகளில் கொடுத்த இரண்டு சுலபமான பிடியெடுப்புகளை ஜடேஜா நழுவ விட, அவர் அதிரடி காட்டத் தொடங்கினார். மறுமுனையில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உத்தப்பாவும் 6 ஓட்டங்களோடு அடங்கினார். நரேன் 32 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஜடேஜாவின் பந்தில் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். கொல்கத்தா அணியில் இணைக்கப்பட்ட இளையவீரர்களாக ரிங்குவும், சுப்மன் கில்லும் விக்கெட் இழப்பைத் தடுத்து நிறுத்தி, கொல்கத்தாவுக்கு உயிரூட்ட முனைந்தனர். ஆயினும் ஒரு கட்டத்தில் ஹர்பஜனின் சுழலில், 16 ஓட்டங்களை எடுத்திருந்த ரிங்கு, சங்காகிப் போனார். ஆனால் அதன் பின்னர் சுப்மன் கில்லும், அணித்தலைவர் தினேஷ் கார்த்திக்கும் சென்னையைப் புரட்டி எடுத்தனர். இருவரையும் பிரிக்க பல வியூகங்களை டோனி அமைத்த போதும் எதுவும் பலனளிக்கவில்லை. இருவரும் இணைந்து அணியை, 17.4 ஓவரிலேயே வெற்றியடைய வைத்தனர். சுப்மன் 57 ஓட்டங்களையும், தினேஷ் கார்த்திக் 45 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

கொல்கத்தா அணி , சென்னையை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி, கடந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது.

2 விக்கெட்டுகளை வீழ்த்தி, ஓட்டங்களையும் சிக்கனமாகக் கொடுத்து, 32 ஓட்டங்களையும் குவித்த சுனில் நரேன் ஆட்ட நாயகனானார். (அ)

## பந்து வீசத் தடை

டுபாய்,மே 04

சர்வதேச போட்டியில் பந்து வீச மேற்கிந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரொன்ஸ்போர்ட் பீட்டனுக்கு ஐ.சி.சி. தடைவிதித்துள்ளது.

மேற்கிந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ரொன்ஸ்போர்ட் பீட்டன். இவர் கடந்த டிசம்பர் மாதம் 24ஆம் திகதி நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாடினார். அப்போது இவரது பந்து வீச்சில் சந்தேகம் இருப்பதாக கூறப்பட்டது.

இதனால், பீட்டன் பந்து வீச்சை ஐ.சி.சி. அங்கீகரிப்பட்ட ஆராய்ச்சி மையத்திற்கு சென்று பரிசோதனைக்கு உட்படுத்தி சரிசெய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால், ரொன்ஸ்போர்ட் பீட்டன் தனது பந்து வீச்சை ஆய்வுக்கு உட்படுத்தவில்லை.

இதனால் ஐ.சி.சி. சர்வதேச போட்டியில் பந்து வீச அவருக்கு தடைவிதித்துள்ளது. அத்துடன் வெளிநாட்டில் நடைபெறும் லீக் தொடர்களிலும் பந்து வீச தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கிந்தியாவில் நடைபெறும் உள்நாட்டு தொடரில் பங்கேற்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 04.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.